# அப்போஸ்தலர்கள்: அன்று முதல் இன்று வரை

**வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்**

அப்போஸ்தலர் 1:3இல் "இயேசுகிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினால் கட்டளை கொடுத்த பின்னர் பரலோகத்துக்குச் சென்றுவிட்டார்" என்று லூக்கா கூறுவதினால், இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் யார் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டியது அவசியம். ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக வாழ்க்கை வரலாற்றை அறியத்தரும் சுவிசேஷப் புத்தகங்களில்[1] அவர் சீடர்களைத் தெரிவுசெய்ததையும், அவர்களுக்குக் கட்டளைகள் கொடுத்ததையும்பற்றியே நாம் வாசிக்கின்றோம். ஆனால், இயேசுகிறிஸ்துவுக்குப் பல சீடர்கள் இருந்தாலும், அவருடன் எப்பொழுதும் இருந்த பன்னிரு சீடர்களும் அவருடைய அப்போஸ்தலர்களாக உள்ளனர். ஏனெனில், இயேசுகிறிஸ்து இவர்களுக்கே அப்போஸ்தலர் என்று பெயரிட்டுள்ளார். இதைப்பற்றி லூக்கா சுவிசேஷப் புத்தகத்தில் எழுதும்போது, "பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே" (லூக்.6:13-16) என்று குறிப்பிட்டுள்ளார். இதைப்போலவே மத்தேயு எழுதிய சுவிசேஷத்திலும் இயேசுகிறிஸ்துவின் பன்னிரு சீடர்களும் அப்போஸ்தலர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் (மத்.10:1-4).[2] எனவே, கிறிஸ்தவ உலகில் இயேசுகிறிஸ்துவின் சீடர்களாக அறியப்பட்டுள்ள பன்னிருவருமே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களாக இருக்கின்றனர்.[3] எனினும், இயேசுகிறிஸ்துவுக்கு இப்பன்னிரு சீடர்கள் மாத்திரமல்ல இன்னும் பல சீடர்கள் இருந்தனர். இதனால்தான் ஒருதடவை அவரால் எழுபது பேரை ஊழியத்திற்கு அனுப்பக் கூடியதாயிருந்தது (லூக்.10:1).[4] உண்மையில், அக்காலத்தில் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் அனைவருமே அவருடைய சீடர்களாக அறியப்பட்டிருந்தனர். ஏனெனில், அந்தியோகியா என்னும் பட்டணத்தில் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும்வரை அவர்கள் சீடர்கள் என்றே அறியப்பட்டிருந்தனர்.[5] இதனால்தான், முதல் சபையில் மக்களின் எண்ணிக்கை அதிகரித்ததை "அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகின போது" என்று லூக்கா குறிப்பிட்டுள்ளார் (அப்.6:1). இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தைவிட்டுச் செல்லும்போது அவரைப் பின்பற்றிய சீடர்கள் 120 பேர் எருசலேம் நகரில் இருந்தனர் (அப்.1:15).

இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களில் பனினிருவரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பெயரிட்டாலும், புதிய ஏற்பாட்டில், இவர்களைத் தவிர இயேசுகிறிஸ்துவின் சகோதரர்களான யாக்கோபு, யூதா என்பவர்களும் (அப்.15:13, கலா.1:19, 2:9)[6] இயேசு

---

[1] புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்போர் எழுதிய புத்தகங்கள், இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக வாழ்க்கை வரலாற்றை அறியத்தரும் சுவிசேஷப் புத்தகங்களாகும்.

[2] மத்தேயு 10:1-4இல், "அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான், பிலிப்பு, பற்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு, கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவைகளே" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[3] இயேசுகிறிஸ்துவின் சீடர்களில் பன்னிருவரும் சுவிசேஷப் புத்தகங்களில் சீடர்கள் என்றே அழைக்கப்பட்டுள்ள போதிலும், மாற்கு 5:30, மத்தேயு 10:2, லூக்கா 9:10, 17:5, 22:14, 24:10 என்னும் வசனங்களில் இவர்கள் அப்போஸ்தலர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்.

[4] லூக்கா 10:1இல், "இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[5] புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் என்னும் சொல் மூன்று இடங்களில் மாத்திமே உள்ளது.

[6] அப்போஸ்தலர் 15ஆம் அதிகாரத்தில் சபையின் தலைவர்களாக இருந்த அப்போஸ்தலர்களில் (அப்.15:4) இயேசுகிறிஸ்துவின் சகோதரரான யாக்கோபே முதன்மையானவராக இருந்தார். இதானால்தான், சபையின் தீர்மானத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பவராக அவர் செயற்பட்டுள்ளார் (அப்.15:13). மேலும், கலாத்தியர் 1:19இல் "கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத் தவிர, அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை"

கிறிஸ்துவின் சீடர்களாக இராத பவுல், பர்னபா என்பவர்களும் (அப்.14:14),[7] ரோமர் 16:7இல் குறிப்பிடப்பட்டுள்ள அன்றோனீக் யூனியா[8] என்பவர்கள் உட்பட இன்னும் பலரும் அப்போஸ்த லர்களாக இருந்துள்ளனர். ஏனெனில், ரோமர் 16:7இல், இவர்களிருவரும் "அப்போஸ்தலருக்குள் பெயர்பெற்றவர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதினால் அக்காலத்தில் பல அப்போஸ்தலர்கள் இருந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்கின்றோம்.[9] மேலும், 1தெசலொனிக்கேயர் 2:6ல் "நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும்" என்று பவுல் கூறும்போது, நாங்கள் என்று தன்னையும் சில்வான் என்று குறிப்பிடப்பட்டுள்ள சீலாவையும் தீமோத்தேயுவையும் சேர்த்தே அப்போஸ்தலர் என்று கூறுகிறார் என்பதை இந்நிருபத்தின் ஆரம்ப வசனம் அறியத்தருகின்றது. ஏனெனில், அவ்வசனத்தில் சீலாவையும் தீமோத்தேயுவையும் தன்னோடு சேர்த்து, தாங்கள் மூவருமே இந்நிருபத்தை எழுதுவதாகப் பவுல் குறிப்பிட்டுள்ளார் (1தெச.1:1). இதைப்போலவே, 1கொரிந்தியர் 4:6-9ல் அப்பொல்லோவையும் தன்னுடன் சேர்த்து "தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை" என்று பவுல் கூறுவதனால் அப்பொல்லோவும் ஒரு அப்போஸ்தலனாக இருந்துள்ளான் என்பது தெளிவாகின்றது. மேலும், 2கொரிந்தியர் 8:23இல் தீத்துவும், பிலிப்பியர் 2:9இல் எப்பாபிரோதீத்து என்பவனும் "ஸ்தானாபதிகள்" என்று அழைக்கப்பட்டுள்ளபோதிலும் மூலமொழியில் அப்போஸ்தலன் என்னும் சொல்லே உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, வேதாகமத்தில் இயேசுகிறிஸ்துவின் பன்னிரு சீடர்கள் மாத்திரமல்ல, ஏனையவர்களும் அப்போஸ்தலர்களாக இருந்துள்ளனர்.

வேதாகமத்தில் இயேசுகிறிஸ்துவின் பன்னிரு சீடர்கள் மாத்திரமல்ல, அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவருடைய சீடர்களாக இராதவர்களும் அப்போஸ்தலர்கள் என்றே குறிப்பிடப் பட்டுள்ள போதிலும், தற்காலத்தில் சில கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் சீடர்களும் பவுலும் இவர்களைத் தவிர இன்னும் ஓரிருவரும் மாத்திரமே அப்போஸ்தலர்கள் என்றும்,[10] இதனால், "தற்கால சபைகளில் அப்போஸ்தலர்கள் இல்லை"[11] என்றும் கூறுவதோடு, "அப்போஸ்தலர்கள்

---

என்று பவுல் கூறுவதனால், எருசலேம் சபையில் யாக்கோபும் ஒரு அப்போஸ்தலராகவே இருந்துள்ளார். இதனால்தான், இயேசுகிறிஸ்துவின் சீடர்களான பேதுரு யோவான் என்பவர்களுடன் யாக்கோபையும் சேர்த்து "தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும்" என்றும் பவுல் கலாத்தியர் 2:9இல் குறிப்பிட்டுள்ளார். இயேசுகிறிஸ்துவின் சீடர்களில் ஒருவருடைய பெயர் யாக்கோபு என்பது உண்மை என்றாலும், அவர் அப்போஸ்தலர் 12ம் அதிகாரத்தில் இரத்தசாட்சியாக மரிக்கின்றார் (அப்.12:1-2). இதனால் அப்போஸ்தலர் 15ம் அதிகாரத்திலும் கலாத்தியர் நிருபத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள யாக்கோபு இயேசுகிறிஸ்துவின் சீடன் யாக்கோபு அல்ல. அவர் இயேசுகிறிஸ்துவின் சகோதரன் யாக்கோபு (மாற்.6:9). மேலும், யாக்கோபின் சகோதரன் யூதா எழுதிய ஒரு நிருபமும் வேதாகமத்தில் இருப்பதனால் (யூதா.1) இவரும் அக்காலத்தில் அப்போஸ்தலராகவே இருந்துள்ளார்.

7 அப்போஸ்தலர் 14:14ல் பவுலும் பர்னபாவும் அப்போஸ்தலர்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

8 யூனியா என்பது பெண்ணின் பெயராகும். எனவே, அக்காலத்தில் பெண் அப்போஸ்தலர்களும் இருந்துள்ளனர். எனினும், பெண்கள் அப்போஸ்தலராயிருக்க முடியாது என்னும் எண்ணத்தில் சிலர் இதை ஒரு ஆணின் பெயராகக் கருதுகின்றனர். ஆனால் இது ஒரு பெண்ணின் பெயராகவே ஆரம்பகாலத்தில் சபைத் தலைவர்களினால் புரிந்துகொள்ளப்பட்டிருந்தது (R.Jewett, *Romans: Hermeneia Bible Commentary*, p. 961). எனினும், கி.பி.13ஆம் நூற்றாண்டிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இதை ஒரு ஆணிண் பெயராகக் கிறிஸ்தவர்கள் கருதினார்கள் (D.J.Moo, *Romans: The New International Commentary on the New Testament*, p. 922). ஆனாலும், ஆரம்பகால கிறிஸ்தவர்கள் இதை ஒரு பெண்ணின் பெயராகக் குறிப்பிட்டுள்ளதினால், இதற்குப் போதியளவு ஆதாரங்கள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (K.P.Donfried, *The Romans Debate Revised*, pp. 223-224; R.S.Cervin, "A Note Regarding the Name Junia(s) in Romans 16:7" In *New Testament Studies*. 40 (1994), pp. 464-470; R.R.Schulz "Romans 16:7: Junia or Junias?" In *Expository Times*. 98 (1986-87), pp. 109-110). மேலும், ஆக்கில்லா பிரிஸ்கில்லா என்போரைப் போலவே அன்றோனீக் யூனியா என்னும் இருவரும் கணவன் மனைவியாக இருந்திருக்கவேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (L.Morris, *Romans: The Pillar New Testament Commentary*, p. 533; F.Blass & A.Debrunner, *A Greek Grammar of the New Testament*, p. 125).

9 சில ஆராய்ச்சியாளர்கள் இவ்வசனத்தை "அப்போஸ்தலருக்குத் தெரிந்தவர்கள்" என்றே மொழிபெயர்க்க வேண்டும் என்று கூறுகின்றனர் (M.H.Burer & D.B.Wallace, "Was Junia Really an Apostle?A Re-examination of Romans 16:7" In *New Testament Studies*. 47 (2001), pp. 76-91). ஆனால், இவ்வாக்கியத்தின் இலக்கண அமைப்பு முறையையும், இவ்வாக்கியத்தைப்பற்றிய ஆதிசபைத் தலைவர்களின் கூற்றுகளையும், ஆரம்பகால வேதாகம மொழிபெயர்ப்புகளையும் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, நம்முடைய வேதாகமத்தில் உள்ளவிதமாக "அப்போஸ்தலருக்குள் பெயர்பெற்றவர்கள்" என்பதே இவ்வாக்கியத்தின் சரியான மொழிபெயர்ப்பு என்பதை அறிந்திடலாம் (L.Belleville, A Re-examination of Romans 16:7 in Light of Primary Source Materials" In *New Testament Studies*. 51 (2005), p. 231-249; R.Jewett, *Romans: Hermeneia Bible Commentary*, p. 963; E.J.Epp, *Junia: The First Woman Apostle*, pp. 79-81. Minneapolis: Fortress Press, 2005).

10 W.Hendriksen, *New Testament Commentary 1&2 Thessalonians 1&2 Timothy and Titus*, p. 50; J.R.W. Stott, *The preacher's Portrait*, p. 15; W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, pp. 906-913.

11 V.Budgen, *The Charismatics and the Word of God*, pp. 92-111.

சபையின் ஆரம்ப காலத் தலைவர்கள்"[12] என்பதனால், "அப்போஸ்தலப் பணி சபையின் ஆரம்ப காலத்துக்கு மட்டுமானது"[13] என்று வாதிடுகின்றனர். ஆனால், சபைக்கு அருளப்பட்ட ஊழியர்களில் அப்போஸ்தலர்களும் இருப்பதாகவே வேதாகமம் கூறுகிறது. இதனால்தான், "நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்க ளாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" என்று எபேசியர் 4:11-13இல் குறிப்பிடப்பட்டுள் ளது. இவ்வசனங்களைக் கவனித்துப் பார்க்கும்போது, 13ஆம் வசனத்தில் உள்ள ஐவகையான ஊழியர்களும் 12ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி "சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக வும், சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்" இருப்பதை அறிந்துகொள்ளலாம். மேலும், 11ஆம் வசனத்தின்படி, இத்தகைய ஊழியர்களின் பணிகள் நாம் "கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும்" இருக்கும் என்பதையும் அறிந்து கொள்ளலாம். எனவே, இந்த ஐவகையான ஊழியர்களில் அப்போஸ்தலர்களும் இருப்பதனால், தற்கால சபைகளிலும் அப்போஸ்தலர்கள் இருக்கின்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இல் லையென்றால் இவ்வசனங்களில் அப்போஸ்தலர்களைப்பற்றி குறிப்பிட்டுள்ளது அர்த்தமற்றதா கவே இருக்கும். ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் சீடர்களும் பவுலும் இன்னும் ஒருசிலரும் மாத்திரமே அப்போஸ்தலர்கள் என்றால், எபேசு பட்டணத்திலிருந்த சபைகளுக்கு எழுதப்பட்ட இந்நிருபத்தில் அவர்களுடைய சபையின் வளர்ச்சிக்காகவும் சுவிசேஷப் பணிக்காகவும் அப்போஸ்தலர்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பது அர்த்தமற்றதாகவே இருக்கும்.

தற்கால சபைகளில் அப்போஸ்தலர்கள் இல்லை என்று பலர் கருதுவதற்குக் காரணம், எபேசியர் 2:20இல், "அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் சபையின் அஸ்திபாரமாக" இருப்பதாகக் குறிப்பி டப்பட்டிருப்பதேயாகும்.[14] ஆனாலும், இதை முரண்படுத்தும் விதத்தில் இயேசுகிறிஸ்துவே சபையின் அஸ்திபாரமாக இருக்கின்றார் என்பதையும், போடப்பட்டிருக்கிற இந்த அஸ்திபாரத் தைத் தவிர வேறே அஸ்திபாரத்தை எவராலும் போடமுடியாது என்பதையும் 1கொரிந்தியர் 3:11 அறியத்தருகின்றது.[15] இதனால், 1கொரிந்தியர் 3:11 எபேசியர் 2:20ஐ முரண்படுத்துகிறது. அதாவது, எபேசியர் 2:20 "அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும்" அஸ்திபாரங்களாய் இருக்கின்றார்கள் என்று கூறுகிறது. ஆனால், 1கொரிந்தியர் 3:11இன்படி இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறு அஸ்திபாரம் எதுவும் இல்லை. இதனால், உண்மையிலேயே சபையின் அஸ்திபாரம் யார் என்னும் கேள்வியும் நமக்குள் எழுகிறது. எனினும், வேதாகம சத்தியத்தின்படி 1கொரிந்தியர் 3:11 கூறுவதுபோல இயேசுகிறிஸ்துவே சபையின் அஸ்திபாரமாய் இருக்கின்றார். ஆனால், எபேசியர் 2:20 சரியானவிதத்தில் மொழிபெயர்க்கப்படவில்லை. எனினும், மூலமொழியின் இலக் கண அமைப்பு முறையின்படி இவ்வாக்கியத்தை மூன்றுவிதமாக மொழிபெயர்க்கலாம். அதாவது, பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் உள்ளவிதமாக "அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் அஸ்திபாரங்களாய் இருக்கிறார்கள்" என்று மாத்திரமல்ல, "அப்போஸ்தலர்களிடத்திலும் தீர்க்கத ரிசிகளிடத்திலும் இருக்கும் அஸ்திபாரம்" என்றும், "அப்போஸ்தலர்களினாலும் தீர்க்கதரிசிகளினா லும் போடப்பட்ட அஸ்திபாரம்" என்றும் இவ்வாக்கியத்தை மூன்றுவிதமாக மொழிபெயர்க்க லாம்.[16] தற்காலத்தில் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள், அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிக ளும் சபையின் அஸ்திபாரமாய் இருப்பதாகக் கருதினாலும்,[17] பவுலினுடைய போதனையின்படி,

---

[12] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1595.

[13] K.H. Rengstorf, "Apostleship" In *Theological Dictionary of the New Testament Volume I*. pp. 398-447.

[14] எபேசியர் 2:20இல், "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்" என்று பவுல் குறிப்பிட்டுள்ளார்.

[15] 1கொரிந்தியர் 3:11இல், "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறெ அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[16] இலக்கண ரீதியாக genitive of apposition, possessive genitive, subjective genitive என்று மூவிதமாக மொழிபெயர்க்கலாம்

[17] P.T.O'Brien, *Ephesians: The Pillar New Testament Commentary*, p. 213; F.F.Bruce, *Ephesians: The New International Commentary on the New Testament*, p. 304; A.T.Lincoln, *Ephesians: Word Biblical Commentary Volume 42*, pp. 152-153;

“அப்போஸ்தலர்களினாலும் தீர்க்கதரிசிகளினாலும் போடப்பட்ட அஸ்திபாரம்” என்றே இவ்வாக்கியத்தை மொழிபெயர்க்கவேண்டும்.[18] ஏனெனில், “எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாச்சாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின் மேல் கட்டுகிறான்” (1கொரி.3:10) என்று கூறும் பவுல், “போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது” (1கொரி.3:11) என்றும் தெரிவித்துள்ளார். எனவே, அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் சபையின் அஸ்திபாரங்களாக அல்ல, இயேசுகிறிஸ்து என்னும் அஸ்திபாரத்தைப் போடுகிறவர்களாகவே செயற்பட்டுள்ளனர். அதாவது, “அப்போஸ்தலர்கள் அல்ல, இயேசுகிறிஸ்துவைப்பற்றிய அவர்களுடைய உபதேசமே அவர்கள் போட்ட சபையின் அஸ்திபாரமாக உள்ளது.”[19]

எபேசியர் 2:20இல், அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் சபையின் அஸ்திபாரம் என்று பெரும்பாலான வேதாகமங்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதற்கான காரணம், இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து மூலைக்கல் என்று குறிப்பிடப்பட்டுள்ளதேயாகும். இதனால், இயேசுகிறிஸ்து சபையின் அஸ்திபாரமாக அல்ல, மூலைக்கலாகவே இருக்கின்றார் என்றும் பலர் கருதுகின்றனர். இயேசுகிறிஸ்துவை சபையின் மூலைக்கல் என்று பேதுருவும் குறிப்பிட்டுள்ளார் (1பேது.2:6). ஆனால், அக்காலத்தில் மூலைக்கல்லே கட்டிடங்களின் அஸ்திபாரமாய் இருக்கும் என்பதைத் தற்காலத்தில் பலர் கருத்திற்கொள்வதில்லை. உண்மையில், அக்காலத்தில் பெரிய கட்டிடங்கள் அல்லது கோட்டைகள் கட்டப்படும்போது, உறுதியான ஒரு கன்மலையை அல்லது பெரியதோர் பாறையை ஆதாரமாகக் கொண்டே அதன் சுவர்கள் கட்டப்படும். அதாவது, பூமியின் மேற்பரப்பில் இருக்கும் ஒரு கன்மலையுடன் அல்லது நிலத்துக்கடியில் இருக்கும் பாறையுடன் இணைக்கப்படும் விதத்தில் கட்டிடங்களின் அஸ்திபாரமும் சுவர்களும் கட்டப்படுவதனால் அவைகள் மிகவும் உறுதியானவைகளாக இருக்கும்.[20] எனவே, இயேசுகிறிஸ்துவை சபையின் மூலைக்கல் என்று வேதாகமம் கூறும்போது, அவரை ஒரு பெரும் கன்மலையான அல்லது பாறையான ஒரு அஸ்திபாரமாகவே சித்தரித்துள்ளது. இதனால்தான், இதைப்பற்றிய தீர்க்கதரிசனத்திலும் மூலைக்கல்லே அஸ்திபாரம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, ஏசாயா இதைப்பற்றி முன்னறிவிக்கும்போது, “ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்” (ஏசா.28:16) என்று குறிப்பிட்டுள்ளார். இத்தீர்க்கதரிசனத்தின்படி மூலைக் கல்லே அஸ்திபாரமாய் உள்ளது. எனினும், சீயோனில் அஸ்திபாரமாக வைக்கப்படும் மூலைக்கல் எது என்பதைப்பற்றி பலதரப்பட்ட கருத்துகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ளபோதிலும்,[21] புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் இயேசு கிறிஸ்துவே அஸ்திபாரமான மூலைக்கல்லாக இருக்கின்றார்.[22] இதனால்தான், ஏசாயாவின் இத்தீர்க்கதரிசனம் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறியுள்ளதாகப் பேதுரு குறிப்பிட்டுள்ளார். அதாவது, 1பேதுரு 2:6இல் இத்தீர்க்கதரிசனத்தை சுட்டிக்காட்டும் பேதுரு,[23] அடுத்த வசனத்தில் “ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது. கீழ்ப்படியாமல் இருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக்கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று” என்றும், அப்போஸ்தலர்

---

A.S.Wood, Ephesians: *The Expositor's Bible Commentary Volume 11*, p. 42; E.Best, *Ephesians: A Critical and Exegetical Commentary*, p. 280.

[18] H.A.W.Meyer, *Critical and Exegetical Handbook to the Epistle to the Ephesians*, p. 142; K.O.Sandnes, *Paul – One of the Prophets? A Contribution to the Apostle's Self Understanding*, p. 229 (Tubingen: J.C.B.Mohr, 1991. J.Eadie, Commentary on the Epistle to the Ephesians, p. 197. ஆங்கிலத்தில் NEB, GNB என்னும் வேதாகமங்களில் இத்தகைய மொழிபெயர்ப்பு உள்ளது.

[19] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, pp. 1502, 1688; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 1923.

[20] C.Vaughan, *Ephesians: A Study Guide Commentary*, p. 66; A.S.Wood, *Ephesians: The Expositor's Bible Commentary Volume 11*, p. 42.; W.W.Lloyds, "Notes: Ephesians 2:20-22" In *Classical Review*. 3 (November 2889), p. 419.

[21] O.Kaiser, *Isaiah: 13-39: Old Testament Library Commentary*, p. 253.

[22] J.N.Oswalt, *Isaiah 1-39: The New International Commentary on the Old Testament*, p. 518.

[23] 1பேதுரு 2:6இல், “அந்தப்படியே: இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன், அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது” என்று பேதுரு ஏசாயா 28:16ஐயே சுட்டிக்காட்டுகிறார் (T.R.Schreiner, *1, 2Peter, Jude: The New American Commentary*, pp. 108-109; P.H.Davids, *1Peter: The New International Commentary on the New Testament*, p. 89.).

4:11இல், ‘‘வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக் கல்லானவர்’’ என்றும் பேதுரு குறிப்பிட்டுள்ளார்.

இயேசுகிறிஸ்துவே சபையின் அஸ்திபாரமாயிருக்கும் மூலைக்கல் என்பதைப் பேதுரு நேரடியாக இயேசுகிறிஸ்துவிடமிருந்தே அறிந்துகொண்டிருந்தார். ஏனெனில், சபையைக் கட்டுவதாகக் கூறிய இயேசுகிறிஸ்து, பேதுருவிடமே ‘‘இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்’’ என்று தெரிவித்திருந்தார். இயேசுகிறிஸ்து இதைப்பற்றி பேதுருவிடம் கூறும்போது, ‘‘நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்.’’ (மத்.16:18) என்று அறிவித்தார். எனினும் இவ்வசனம், பேதுருவே சபையின் அஸ்திபாரமாக இருக்கின்றார் என்னும் அர்த்தத்தைத் தருவதாக நமக்குத் தென்படலாம். இதனால், ‘‘பேதுருவை அஸ்திபாரமாகக்கொண்டே இயேசுகிறிஸ்து சபையைக் கட்டுகிறார்’’ என்று பலர் கருதுகின்றனர்.[24] இத்தகைய புரிந்துகொள்ளுதலே எபேசியர் 2:20இல் ‘‘அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் சபையின் அஸ்திபாரமாயிருக்கின்றார்கள்’’ என்னும் மொழிபெயர்ப்புக்கும் காரணமாயுள்ளது. ஆனால், பேதுருவே சபையின் அஸ்திபாரமாக இருந்தால், ‘‘உன் மீது என் சபையைக் கட்டுவேன்’’ என்று நேரடியாகவே இயேசுகிறிஸ்து குறிப்பிட்டிருப்பார்.[25] ஆனால், அவர் இவ்வாறு கூறாமல், ‘‘இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்’’ என்றே கூறினார். மேலும், ‘‘நீ பேதுருவாய் இருக்கின்றாய்’’ என்று கூறும்போது, அவன் எப்படிப்பட்டவனாக இருக்கின்றான் என்பதையே இயேசுகிறிஸ்து அவனிடம் தெரிவித்துள்ளார். ஏனெனில், ‘‘இதற்கு முன்னுள்ள வசனங்களில் இயேசுகிறிஸ்து யார் என்று பேதுரு கூறியதினால் (மத்.16:15-16),[26] இவ்வசனத்தில் பேதுரு எப்படிப்பட்டனாய் இருக்கின்றான் என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.’’[27] இதனால், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய பேதுருவின் அறிக்கைக்கான பதிலாகவே, ‘‘நீ பேதுருவாய் இருக்கிறாய்’’ என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்று உள்ளது.[28] ஆனால், ‘‘இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்’’ என்று அவர் கூறும்போது, தாம் என்ன செய்யப் போகின்றேன் என்பதையே அவர் பேதுருவிடம் தெரிவித்துள்ளார்.[29]

இயேசுகிறிஸ்துவின் கூற்றை சரியான விதத்தில் புரிந்துகொள்வதற்கு மூலமொழியில் எத்தகைய சொற்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். ஏனெனில், இயேசு கிறிஸ்துவின் கூற்றில், ‘‘நீ பேதுருவாய் இருக்கின்றாய்’’ என்பதில், ‘‘பேதுரு’’ என்பதற்குப் ‘‘பெட்ரொஸ்’’ என்னும் கிரேக்கச் சொல் உள்ளது. இது, ‘‘பாறைக் கல்’’ என்னும் அர்த்தமுடைய சொல்லாகும். எனவே, இயேசுகிறிஸ்து பேதுருவிடம், ‘‘நீ பாறைக் கல்லாய் இருக்கின்றாய்’’ என்றே கூறுகிறார். ஆனால், இதனைத் தொடர்ந்து ‘‘இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்’’ என்று இயேசுகிறிஸ்து கூறும்போது, ‘‘இந்தக் கல்’’ என்பதற்கு மூலமொழியில் ‘‘பெட்ரொஸ்’’ என்னும் சொல் இல்லை. இதற்குப்பதிலாக, ‘‘பெட்ரா’’ என்னும் சொல்லே உள்ளது. ‘‘பெட்ரா’’ என்பது ‘‘பாறை’’ என்னும் அர்த்தமுடைய சொல்லாகும். எனவே, ‘‘பாறை’’ என்பதற்கும் ‘‘பாறைக்கல்’’ என்பதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில், ‘‘பாறைக் கல்’’ என்பது தனியாக இருக்கும் ஒரு கல்லாகும். ஆனால் ‘‘பாறை’’ என்பது, நாம் ஏற்கனவே பார்த்தவிதமாக, கட்டிடங்களின் அஸ்திபாரமான மூலைக்

---

[24] V.L.Blomberg, *Matthew: The New American Commentary*, p. 252; M.J.Wilkins, *Matthew: The NIV Application Commentary*, p. 563; R.T.France, *Matthew: Tyndale New Testament Commentary*, p. p. 254; D.A.Hagner, *Matthew: Word Biblical Commentary Volume 33*, p. 470; W.F.Albright & C.S.Mann, *Matthew: Anchor Bible Commentary*, p. 647; D.A.Carson, *Matthew: The Expositor's Bible Commentary Volume 8*, p. 368.

[25] J.C.Ryle, *Expository Thoughts on Matthew*, p. 193.

[26] மத்தேயு 16:15-16இல், ‘‘அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[27] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 422.

[28] M.J.Wilkins, *Matthew: The NIV Application Commentary*, p. 561; E.Young, ed., *Truth and Certainty*, p. 50. New York: Herder & Herder, 1973.

[29] சில ஆராய்ச்சியாளர்கள் இதைப் பேதுருவுக்குப் பெயரிடும் சம்பவமாகக் கருதுகின்றனர் (B.F.Meyer, *The Aims of Jesus*, pp. 186-187 London: SCM Press, 1979; E.Schweizer, *The Good News According to Matthew*, p. 341. Atlanta: John Knox Press, 1975). ஆனால், இயேசுகிறிஸ்து முதல் தடவையாகப் பேதுருவை சந்தித்தபோதே சீமோன் என்னும் அவனுடைய பெயரைக் கேபா என்று மாற்றினார் (யோவா.1:42). கேபா என்னும் அரமேயப் பெயர் கிரேக்கத்தில் பெட்ரொஸ் (தமிழில் பேதுரு) என்று அழைக்கப்படுகின்றது.

கல்லாக இருக்கும் பெரியதோர் கன்மலையை அல்லது நிலத்துக்கடியில் அல்லது மேற்பரப்பில் நிலத்தோடு சேர்ந்த விதத்தில் இருக்கும் பெரியதோர் பாறையாகும். எனவே, "நீ பேதுருவாய் இருக்கின்றாய்" என்று இயேசுகிறிஸ்து கூறும்போது, "நீ ஒரு சாதாரண பாறைக்கல்லாய் இருக்கின்றாய்" என்றே தெரிவித்துள்ளார். எனவே, இயேசுகிறிஸ்து சாதாரணமான பாறைக் கல்லாய் இருக்கும் பேதுருவின் மீது சபையைக் கட்டவில்லை. இப்படி அவர் பேதுருவை அஸ்திபாரமாகக் கொண்டு அவன்மீதே சபையைக் கட்டுகிறவராக இருந்திருந்தால் "நீ பேதுருவாய் (பாறைக் கல்லாய்) இருக்கின்றாய். உன்மீது என் சபையைக் கட்டுவேன்" என்றே கூறியிருப்பார். எனவே, இயேசுகிறிஸ்து பேதுருவிடம், "நீ பாறைக் கல்லாய் இருக்கிறாய்" என்று கூறினாலும் "உன்மீது என் சபையைக் கட்டுவேன்" என்று கூறாமல், "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று தெரிவித்துள்ளதினால் இயேசுகிறிஸ்து எதன்மீது சபையைக் கட்டுகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் கூற்றில் "இந்தக் கல்" என்பது பேதுருவைக் குறிக்கவில்லை என்று வாதிடுபவர்கள், பேதுரு இயேசுகிறிஸ்துவைப்பற்றி கூறியதையே இச்சொற்பிரயோகம் சுட்டிக் காட்டுவதாகக் கருதுகின்றனர்.[30] இதனால், "உன்னதமான தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு இயேசுகிறிஸ்துவைப்பற்றி கூறியதே சபையின் அஸ்திபாரமாக இருப்பதாகக் கருதப்படுகின்றது.[31] எனினும், வேதாகம சத்தியத்தின்படி, பேதுரு இயேசுகிறிஸ்துவைப்பற்றி கூறிய விஷயம் அல்ல, இயேசுகிறிஸ்துவே சபையின் அஸ்திபாரமாயிருக்கின்றார். எனவே, இயேசுகிறிஸ்து தம்மையே "இந்தக் கல்" என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது தாமே சபையின் அஸ்திபாரம் என்பதையே அவர் பேதுருவிடம் தெரிவித்துள்ளார். இயேசுகிறிஸ்துவின் கூற்றைப் பேதுரு இத்தகைய அர்த்தத்தில் புரிந்துகொண்டதினாலேயே, நாம் ஏற்கனவே பார்த்தபடி, 1பேதுரு 2:6இலும் அப்போஸ்தலர் 4:11இலும் இயேசுகிறிஸ்துவை அஸ்திபாரமாயிருக்கும் மூலைக்கல்லாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே, "சபையானது தனியாக இருக்கும் ஒரு கல்லை அல்ல, உறுதியான ஒரு பாறையையே அஸ்திபாரமாகக் கொண்டுள்ளது."[32] அதாவது, தனியான கல்லாயிருக்கும் பேதுரு அல்ல, பாறையாயிருக்கும் இயேசுகிறிஸ்துவே சபையின் அஸ்திபாரமாய் இருக்கின்றார்.[33] இயேசுகிறிஸ்துவின் கூற்றைப் பேதுரு இத்தகைய அர்த்தத்தில் புரிந்துகொண்டதினாலேயே தன்னைப்போன்ற விசுவாசிகள் சபையில் "கற்களாய் இருக்கின் றார்கள்" என்றும் (1பேது.2:5),[34] அஸ்திபாரமாய் இருக்கும் இயேசுகிறிஸ்து "மூலைக்கல்லாக இருக்கின்றார்" என்றும் குறிப்பிட்டுள்ளார் (அப்.4:11).[35] ஏனெனில், நாம் ஏற்கனவே பார்த்த விதமாக, அக்காலத்தில் மூலைக்கல்லே கட்டிடத்தின் அஸ்திபாரமாய் இருந்தது. எனவே, மூலைக்கல்லாகப் பேதுருவினாலும் பவுலினாலும் குறிப்பிடப்பட்டிருக்கும் இயேசுகிறிஸ்துவே சபையின் அஸ்திபாரமாய் இருக்கின்றார்.

இயேசுகிறிஸ்துவே சபையின் அஸ்திபாரமாக இருப்பதனால், எபேசியர் 2:20, 1கொரி.3:10-11இன்படி, அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் சபைகளை ஸ்தாபிக்கும்போது இயேசு கிறிஸ்துவை அஸ்திபாரமாகப் போட்டுள்ளனர். இதனால்தான், பவுல் கொரிந்து பட்டணத்தில் சபையை ஸ்தாபித்ததைப்பற்றி கூறும்போது "எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாச்சாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன்" (1கொரி.3:10) என்று குறிப்பிட்டுள் ளார். எனவே, பவுலினுடைய அப்போஸ்தலப் பணியின் முக்கியமான அம்சம் இயேசுகிறிஸ்து

---

[30] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 1266.

[31] W.Allen, *Matthew: A Critical and Exegetical Commentary*, p. 176; A.H.McNeile, *Matthew: The Greek Text with Introduction, Notes, and Indices*, p. p. 241; C.Caragounis, *Peter and the Rock*, pp. 88-119; A.A.Bruce, *Matthew: The Expositor's Greek Testament Commentary Volume 1*, p. 224.

[32] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 1266.

[33] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1154.

[34] 1பேதுரு 2:5இல், "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[35] அப்போஸ்தலர் 4:11இல், "வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்" என்றும், 1பேதுரு 2:7இல், "ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது. கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று" என்றும் பேதுரு குறிப்பிட்டுள்ளார்.

வினால் அனுப்பப்பட்டு சபைகளை ஸ்தாபித்தலாகும். இவ்வாறு இயேசுகிறிஸ்துவினால் அனுப்பப் பட்டவர்களினால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகள் வேறு பிரதேசங்களில் சபைகளை ஸ்தாபிப்பதற்காக ஊழியர்களை அனுப்பும்போது அவர்களும் அப்போஸ்தலர்களாகவே இருக்கின்றனர். இதனால் தான், நாம் ஏற்கனவே பார்த்த விதமாகப் பவுலோடு சபைகளை ஸ்தாபிக்க சென்றவர்களும், அவர்களினால் ஸ்பிக்கப்பட்ட சபைகளிலிருந்து அனுப்பப்பட்டவர்களும் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். மேலும், கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட “டிடாக்கி” என்னும் ஆதிசபையின் போதனை நூலிலும் அக்காலத்தில் சபையில் அப்போஸ்தலர்கள் இருந்துள்ளதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.[36] ஏனெனில், “உலகெங்கும் சென்று இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷத்தை அறிவிப்பதே அப்போஸ்தலர்களின் பிரதான பணியாய் உள்ளது.”[37] எனவே, தற்காலத்திலும் ஒரு சபையினால் புதிய இடங்களுக்கு அல்லது நாடுகளுக்கு அனுப்பப்பட்டு, இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்துப் புதிய சபைகளை உருவாக்குபவர்களும் அப்போஸ்தலர்களாகவே இருக்கின்றனர்.[38]

இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்த யூதாசுக்குப் பதிலாக இன்னுமொரு அப்போஸ்தலன் தெரிவுசெய்யப்பட்டபோது, அவன் இயேசுகிறிஸ்துவின் ஊழிய காலத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அவரோடு இருந்தவனாகவும், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் அவரைக் கண்டவனாகவும் இருக்கவேண்டும் என்று பேதுரு கூறுவதனால் (அப்.1:21-22),[39] இயேசு கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களும் பவுலும் இன்னும் ஒரு சிலரும் மாத்திரமே அப்போஸ்தலர்கள் என்று சிலர் கருதுகின்றனர்.[40] ஆனால், நாம் ஏற்கனவே பார்த்தபடி பவுலோடு புதிய சபைகைள ஸ்தாபிக்கச் சென்றவர்களும் சபையினால் அனுப்பப்பட்ட ஊழியர்களும் அப்போஸ்தலர்கள் என்றே அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால், இவர்கள் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோது அவரோடு இருக்கவுமில்லை. உயிர்த்தெழுந்த பின்னர் அவரைக் காணவுமில்லை.[41] இதனால், இயேசுகிறிஸ்துவோடு சரீரப்பிரகாரமாக இருந்தவர்களும், அவர் உயிர்த்தெழுந்த பின்னர் அவரைக் கண்டவர்களும் மாத்திரமே அப்போஸ்தலர்கள் என்னும் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.[42] ஆனால், பேதுரு யூதாசுக்குப் பதிலாக ஒருவனைத் தெரிவுசெய்ததி னாலேயே அவனும் இயேசுகிறிஸ்துவின் ஏனைய சீடர்களைப் போலவே இருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் 1:21-22இல் தெரிவித்துள்ளார். மேலும், எபிரெயர் 3:1இல், இயேசுகிறிஸ்துவும்

---

[36] *The Didache*, Section 11.

[37] J.Calvin, *Institutes of the Christian Religion*, p. 702.

[38] E.Gibbs, *I Believe in Church Growth*, p. 341. London: Hodder & Stoughton, 1981.

[39] அப்போஸ்தலர் 1:21-22இல், “யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள்முதற்கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடேழுந்ததைக்குறித்து, எங்களுடனேகூடச் சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும்” என்று பேதுரு தெரிவித்துள்ளார்.

[40] V.Budgen, *The Charismatics and the Word of God*, pp. 97, 103; J.D.Douglas, ed., *The New Bible Dictionary*, p. 50; W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, pp. 906-913; J.B.Lightfoot, The Epistle of St.Paul to the Galatians, pp. 92-101. Zondervan, 1957.

[41] வேதாகமத்தில் அப்போஸ்தலர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள பர்னபா, சீலா, தீமொத்தேயு, அன்றோனீக், யூனியா, தீத்து, எப்பாபிரோதீத்து இயேசுகிறிஸ்தவின் ஊழிய காலத்தில் அவரோடு இருந்தவர்கள் அல்ல. இவர்கள் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் அவரைக் கண்டதற்கும் எவ்வித ஆதாரங்களும் இல்லை.

[42] அப்போஸ்தலனாகிய பவுல் தானும் ஒரு அப்போஸ்தலன் என்று கூறும்போது, 2கொரிந்தியர் 12:12இல், “அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே” என்று குறிப்பிட்டுள்ளதினால், அப்போஸ்தலனாயிருப்பவன் அற்புதங்கள் செய்யக்கூடிய வரமுள்ளவனாகவும் இருக்கவேண்டும் என்றும் சிலர் வாதிடுகின்றனர் (W.J.Chantry, *Sign of the Apostle*, pp. 17-21). “அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது” (அப்.5:12-16, 9:36-42, 19:11-12) உண்மை என்றாலும், அற்புதங்கள் செய்யும் ஆற்றல் சபையிலிருக்கும் சாதாரண விசுவாசிகளுக்கும் அருளப்படும் ஒரு வரமாயிருப்பதை 1கொரிந்தியர் 12:10 அறியத்தருகின்றது. மேலும், கலாத்தியர் 3:5இல், “உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்?” என்று சபை விசுவாசிகளிடமே கேட்கின்றார். மேலும் அப்போஸ்தலனாயிராத பிலிப்பு என்பவனுடைய ஊழியத்திலும் அப்போஸ்தலருக்கு சமமான அற்புதங்களும் நடைபெற்றுள்ளதை அப்போஸ்தலர் 8:6-7 அறியத்தருகின்றது.

அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்டுள்ளார்.[43] எனவே, இயேசுகிறிஸ்துவோடு இருந்தவர்களும் அவர் உயிர்த்தெழுந்த பின்னர் அவரைக் கண்டவர்களும் மாத்திரமே அப்போஸ்தலர்கள் என்றால், இயேசுகிறிஸ்துவை அப்போஸ்தலர் என்று அழைப்பது அர்த்தமற்றதாகவே இருக்கும். உண்மையில், “அப்பொஸ்டொலொஸ்” என்னும் கிரேக்கச் சொல் மொழிபெயர்க்கப்படாமல் ஆங்கிலத்தில் “அப்போஸ்டல்” என்றும், தமிழில் “அப்போஸ்தலன்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ள தினாலேயே, இதைத் தனித்துவமான ஊழியமாகவும், குறுகிய காலத்திற்கு வரையறை செய்யப்பட்ட பணியாகவும் கிறிஸ்தவர்கள் கருதுவதற்கான காரணமாயுள்ளது. இதனால், அப்போஸ்தலன் என்றால் யார் என்பதை நாம் சரியானவிதத்தில் அறிந்துகொள்ள வேண்டும். இதற்கு இச்சொல்லின் அர்த்தம் என்ன என்பது நமக்கு முதலில் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில், “அப்பொஸ்டொலொஸ்” என்னும் கிரேக்கச் சொல்லே ஆங்கிலத்தில் அப்போஸ்டல் (Apostle) என்றும் தமிழில் அப்போஸ்தலன் என்றும் எழுதப்பட்டுள்ளதனால், இக்கிரேக்கச் சொல்லின் அர்த்தத்தை அறியாதவரை அப்போஸ்தலன் என்றால் யார் என்பதை அறியாதவர்க ளாகவே நாம் இருப்போம்.

“அப்பொஸ்டொலொஸ்” என்னும் கிரேக்கச் சொல் “அனுப்புதல்” என்னும் அர்த்தமுள்ள “அப்பொஸ்டெலோ” (*apostello*) என்னும் வினைச் சொல்லிலிருந்து வந்துள்ளது. எனவே, இதன் பெயர்ச்சொல்லான அப்பொஸ்டொலொஸ் என்னும் கிரேக்கச் சொல் “அனுப்பப்பட்டவன்” என்னும் அர்த்தமுடையது.[44] அக்கால கிரேக்க உலகில் ஒருவருடைய பிரதிநிதியாக அனுப்பப்ப டுபவர் அவருடைய அப்போஸ்தலனாக இருந்தார்.[45] இதனால்தான், தேவனைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் விதத்தில் அவரால் அனுப்பப்பட்ட இயேசுகிறிஸ்து எபிரெயர் 3:1இல் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்டுள்ளார். மேலும், யோவான் எழுதிய சுவிசேஷத்தில் பதினேழு தடவைகள் “அனுப்புதல்” என்னும் அர்த்தந்தரும் “அப்பொஸ்டெலோ” என்னும் வினைச்சொல் 17 தடவைக ளும், இவ்வர்த்தத்தைத் தரும் “பெம்போ” (*pempo*) என்னும் இன்னுமொரு கிரேக்கச் சொல் 26 தடவைகளும் இயேசுகிறிஸ்துவுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது.[46] இவ்வசனங்களில் இயேசு கிறிஸ்து தாம் தேவனால் அனுப்பப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். எனவே, தேவனால் அனுப்பப் பட்ட இயேசுகிறிஸ்து அப்போஸ்தலராய் இருப்பதுபோலேவே, அவரால் அனுப்பப்பட்டவர்களும் சபைகளினால் அனுப்பப்பட்டவர்களும் அப்போஸ்தலர்களாய் இருக்கின்றனர். மேலும், கி.பி.4ஆம் நூற்றாண்டில் வேதாகமம் லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டபோது, ஆங்கில தமிழ் வேதாகமங்களைப் போலில்லாமல், “அப்பொஸ்டொலொஸ்” என்னும் சொல் லத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டு “மிஸ்ஸியொனிஸ்” (*missionis*) என்று குறிப்பிடப்பட்டதோடு, இச்சொல்லே பிற்காலத்தில் ஆங்கிலத்தில் “மிஷனரி” என்று அழைக்கப்பட்டது. எனவே, ஆங்கிலத்தில் “அப்போஸ்டல்” “மிஷனரி” என்னும் இரண்டு சொற்களும் ஒரே அர்த்தமுடைய சொற்களாகவே உள்ளன. ஏனெனில், இவ்விரு சொற்களினதும் அர்த்தம் “அனுப்பப்பட்டவன்” என்பதாகும்.[47] எனவே, தற்காலத்தில் மிஷனரிகளாக அனுப்பப்படுபவர்கள் அப்போஸ்தலர்களாகவே இருக்கின்ற னர்.[48] இதனால்தான் வேதாகமத்தில் இயேசுகிறிஸ்துவின் பன்னிரு சீடர்களும் பவுலும் மாத்திர மல்ல இன்னும் பலரும் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்டுள்ளனர்.

தற்கால சபைகளிலும் அப்போஸ்தலர்கள் இருக்கின்ற போதிலும், இயேசுகிறிஸ்துவின் பன்னிரு சீடர்களும் பவுலும் சிறப்பானவர்களாய் இருக்கின்றனர். ஏனெனில், இவர்களில் பவுலைத் தவிர ஏனையவர்கள் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோது அவரால் தனிப்பட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டு,[49] அவரைப்பற்றிய சுவிசேஷத்தை உலகெங்கும் அறிவிப்பதற்காக அவரால்

---

[43] எபிரெயர் 3:1இல், “இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[44] J.D.Douglas, ed., *The New Bible Dictionary*, p. 48; C.Brown, ed., *The New International Dictionary of New Testament Theology Volume 1*, pp. 126-127.

[45] L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, p. 59.

[46] P.T.O’Brien, *Hebrews: The Pillar New Testament Commentary*, p. 129.

[47] L.B.Flynn, *19 Gifts of the Spirit: Which Do You Have? Are You Using Them?* p. 43.

[48] J.D.Myers, *What Are the Spiritual Gifts?* p. 33.

[49] “லூக்கா 6:13-16இல், “பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். அவர்கள் யாரெனில்,

நேரடியாக அனுப்பப்பட்டவர்களாய் இருந்தனர் (மத்.28:19-20).[50] மேலும், இவர்கள் அனைவரும் ஏறக்குறைய மூன்று வருஷங்கள் இயேசுகிறிஸ்துவோடு இருந்ததைப்போலவே,[51] பவுலும் இயேசு கிறிஸ்துவினால் நேரடியாகத் தெரிவுசெய்யப்பட்டு (அப்.9:1-16), ஏறக்குறைய மூன்று வருஷங்கள் அவருடன் தனிமையில் அரபி தேசத்தில் இருந்துள்ளார்.[52] இத்தகைய தனிப்பட்ட அனுபவங்க ளையும், ஒருசில பணிகளையும் தவிர, பன்னிரு சீடர்களினதும் பவுலினதும் ஏனைய அப்போஸ் தலர்களினதும் ஊழியப் பணிகள் ஒரேவிதமானவைகளாகவே உள்ளன. ஏனெனில், இயேசு கிறிஸ்து கட்டளையிட்டபடியே (மத்.28:18-20) பன்னிரு சீடர்களும் அவரைப்பற்றிய சுவிசே ஷத்தை அறிவித்து புதிய சபைகளை உருவாக்குபவர்களாகவும் (அப்.2:38-41 அப்.13:1-5, 17:1-10, 1தெச.3:2,6, 1தீமோ.4:13, 2தீமோ.2:15), விசுவாசிகளுக்கு கிறிஸ்தவ உபதேசங்களைக் கற்பிப்பவர்களாகவும் இருந்தனர் (அப்.2:42, 6:1-4). பவுலினுடைய ஊழியத்திலும் இவற்றை நாம் அவதானிக்கலாம் (அப்.26:15-16, 1கொரி.9:16-23). எனினும் இயேசுகிறிஸ்துவோடு இருந்தமையும், புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை எழுதியமையும், பன்னிருவரையும் பவுலையும் தனித்துவமான அப்போஸ்தலர்களாக்கியுள்ளன. எனினும், எல்லா அப்போஸ்தலர்களும் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை எழுதவில்லை. புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை எழுதிய மாற்குவும் லூக்காவும் அப்போஸ்தலர்கள் இல்லை. ஆனால், சபைகளை உருவாக்குதல், கிறிஸ்தவ உபதேசங்களைக் கற்பித்தல் போன்றவை சகல அப்போஸ்தலர்களதும் பொதுவான பணிகளாய் உள்ளன. இவற்றைச் செய்கின்ற அப்போஸ்தலர்கள் இன்றைய சபைகளிலும் உள்ளனர். எனினும், அப்போஸ்தலப் பணியின் முக்கிய அம்சமாக இருப்பது இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து புதிய சபைகளை உருவாக்குதலாகும். எனவே, “கிறிஸ்தவர்கள் இல்லாத இடத்தில் புதிய சபைகளை உருவாக்குபவர்கள் இக்காலத்தைய அப்போஸ்தலர்களாக இருக்கின்றர்”[53] இதனால், இத்தகைய பணிக்காக, இன்றைய சபைகளுக்கும் அப்போஸ்தல வரம் அருளப்படு கின்றது (எபே.4:12-13). ஏனெனில், “சபையை உருவாக்குகின்ற காலத்தில் அப்போஸ்தலர்க ளையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர்களையும் எழுப்பிய இயேசுகிறிஸ்து, அதன் பின்பும் சபைகளில் இத்தகைய ஊழியங்களின் தேவைகள் ஏற்படும்போது, இவற்றைச் செய்வதற்கான ஊழியர்களை எழுப்புகிறவராக இருக்கின்றார்.”[54]

---

பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே” (லூக்.6:13-16) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போலவே, மத்தேயு 10:1-4இலும் இச்சம்பவம் எழுதப்பட்டுள்ளது.

[50] மத்தேயு 28:19-20இல் “ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்” என்று இயேசுகிறிஸ்து தம்முஜடைய பன்னிரு சீடர்களுக்கம் கட்டளையிட்டுள்ளார்.

[51] சுவிசேஷப் புத்தகங்களில் இயேசுகிறிஸ்து மூன்று தடவைகள் பஸ்கா என்னும் பண்டிகைக்கு எருசலேம் நகரத்துக்குச் சென்றுள்ளதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதினால், அவருடைய ஊழிய காலம் ஏறக்குறைய மூன்று வருஷங்கள் இவ்வுலகத்தில் நீடித்தது என்பதை அறிந்துகொள்கின்றோம்.

[52] தமஸ்கு என்னும் நகரத்திற்குச் செல்லும் வழியில் இயேசுகிறிஸ்துவை சந்தித்த பவுல், கலாத்தியர் 1:16-17இல், “தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும், எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும், அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்” என்று கூறுவதோடு, அடுத்த வசனத்தில் “மூன்று வருஷம் சென்றபின்பு, பேதுருவைக் கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்து நாள் தங்கியிருந்தேன்” என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் இயேசுகிறிஸ்துவை சந்தித்த பவுல் மூன்று வருஷங்கள் அரபி தேசத்தில் இருந்துள்ளார் என்பதை அறிந்துகொள்கின்றோம். அப்போஸ்தலருடைய நடபடிகளில் இது பற்றி குறிப்பிடப்படாவிட்டாலும், அப்போஸ்தலர் 9ம் அதிகாரத்தில் 22ம் 23ம் வசனங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பவுலின் இப்பிரயாணம் இடம்பெற்றிருக்க வேண்டும் (T.George, *Galatians: The New American Commentary*, p. 123). எனினும் தான் அரபி தேசத்திற்குச் சென்றதாகப் பவுல் குறிப்பிட்டாலும் அத்தேசத்தில் அவர் எவ்விடத்திற்குச் சென்றார் என்று கூறாததினால், அவர் எவ்விடத்திற்குச் சென்றார் என்பதை அறிய முடியாமல் உள்ளது. அக்காலத்தில் அரபி தேசம் என்பது பலஸ்தீனாவிற்கு கிழக்கிலும் தெற்கிலும் உள்ள பிரதேசம் முழுவதையும் குறிக்கும் பெயராய் இருந்தது. எனினும், கலாத்தியர் 4:25ல் சீனாய் மலை அரபி தேசத்தில் இருப்பதாகப் பவுல் கூறுவதனால், அவர் சீனாய் மலைக்கே சென்றிருக்க வேண்டும் என்று நம்பப்படுகின்றது. மேலும், பவுல் அங்கிருக்கும் காலத்தில் இயேசுகிறிஸ்து தனிப்பட்ட ரீதியாக அவருக்கு சுவிசேஷத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தியதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (G.D.Fee, *Galatians: Pentecostal Commentary*, pp. 50-51).

[53] L.B.Fynin, *19 Gifts of the Spirit*, pp. 41-47.

[54] J.Calvin, *Institutes of the Christian Religion*, p. 702.